RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s211

OPEN ACCESS

# ஐங்குறுநூற்றில் இயற்கை சார் வாழ்வியல்

**த. முத்துலெட்சுமி [அ, *], ச. மல்லிகா [அ]**

[அ] தமிழ் உயராய்வு மையம், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது) தூத்துக்குடி-628002. தமிழ்நாடு, இந்தியா.

# Natural Life Habitats in Ainkurunuru

**D. Muthulakshmi [a, *], S. Mallika [a, *]**

[a] Department of Tamil, A.P.C. Mahalaxmi College for Women, (Affiliated to Manonmaniam Sundaranar University) Thoothukudi-628002, Tamil Nadu, India

* Corresponding Author: melauthoorlux@gmail.com

Received: 25-03-2021
Revised: 07-01-2022
Accepted: 16-01-2022
Published: 24-02-2022

Check for updates

## ABSTRACT

Creature & live richly nature is Sub Conscious in many ways on this earth for billions of Years all living things have lived in harmony with depend on nature in this connection human life and prosperity have come together the environment has arisen on earth over the past few years give the natural grievous of the problems with are due to activities of human's irregularly. It is an undeniable fact that the environment is irreversibly polluted by human sources. The life of the Sangam people is divided into Kurinji, Mullai, Marutham, Neithal and Palai based on nature. Nature lays the foundation for the smooth life of the people and the emergence of superior cultures. Landscapes that can be seen with the naked eye cause changes in human perceptions. The way of life of the people of the Sangam period was centered on nature and was in harmony with nature. Sangam people considered nature to be a deity. He depended on nature for food, clothing and shelter. This article is about the Natural Life Habitats system of the Ainkurunuru.

**Keywords:** Harmony, Prosperity, Ainkurunuru, Natural Life, Sangam Period

## முன்னுரை

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர். மனிதன் வாழ இயற்கை பலவழிகளில் துணைபுரிகிறது. இயற்கையின்றி மனிதனால் வாழ முடியாது. பூமியில் தோன்றும் ஒவ்வொரு உயிரினமும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு வாழ்பவை. மக்கள் இயற்கையோடு முரண்பாடு இல்லாமல் வாழ்வதனைக் கடமையாகக் கொண்டுள்ளனர். இயற்கையின் அமைப்பிற்கும், மக்களின் வாழ்வியல் முறைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. சங்ககால மக்களின் வாழ்க்கை இயற்கையை அடித்தளமாகக் கொண்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று வகுக்கப்பட்டுள்ளது. மக்களின் சுமுகமான வாழ்விற்கும், தலைசிறந்த பண்பாடுகள் உருவாவதற்கும் இயற்கை அடித்தளமிட்டுத் தருகிறது. கண்களால் காணக் கூடிய இயற்கைக் காட்சிகள் மனிதனின் உணர்வுகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. சங்க கால மக்களின் வாழ்வியல் முறை இயற்கையை மையமாகக் கொண்டு இயற்கையோடு இயைந்து இருந்தது. சங்ககால மனிதன் இயற்கையைத் தெய்வமாக எண்ணினான். உணவு, உடை, உறைவிடம் என அனைத்திற்கும் இயற்கையைச் சார்ந்து வாழ்ந்தான். ஐங்குறுநூற்றில் இயற்கை சார்ந்த வாழ்வியல் முறை குறித்து இக்கட்டுரை அமைகிறது.

## சங்ககால மக்களின் இயற்கை சார்வாழ்க்கை

சங்ககால மக்களின் வாழ்க்கை முறை சுற்றுச்சூழலை மையமாகக் கொண்டு இயற்கையோடு பின்னிப்பிணைந்த நிலையில் வகுக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் எல்லா உயிரினங்களும் ஒன்றையொன்று சார்ந்திருந்ததோடு மனிதன் இயற்கையைத் தெய்வமாக எண்ணித் தனது பெயர், உணவு, உடை, உறைவிடம் என அனைத்திற்கும் இயற்கையைப் பயன்படுத்தினான் (Nagarajan, 2004).

## பொருளைப் பாதுகாத்தலில் சுற்றுச்சூழல்

சங்ககால மக்கள் தங்களின் பொருளைப் பாதுகாப்பதற்குச் இயற்கையைப் பயன்படுத்தினர். கண்ணின் அழகிற்கு இடப்படும் கண்மை கண்ணின் குளிர்ச்சிக்காகவும், கண்ணைச் சுத்தப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. கண்ணில் இடப்படும் அஞ்சனம் கெடாமல் இருக்க வேண்டுமென உள்துளையுடைய நாணல் தண்டினுள் அஞ்சனத்தை இட்டு பாதுகாத்த செய்தியானது

"ஓங்கு பூ வேழத்துத் தூம்புடைத் திரள்கால்

சிறு தொழு மகளிர் அஞ்சனம் பெய்யும்"

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலடி இயற்கையின் மூலம் பாதுகாத்த சங்கமாந்தரின் சுற்றுச்சூழல் அறிவு வியப்பைப் பதிவு செய்கிறது (Thatchinamoorthy, 2004).

## இயற்கை சார் பெயரிடல்

சங்க இலக்கியங்களில் புறப்பாடல்களைத் தவிர அகப்பாடல்களில் மாந்தரின் இயற்பெயர் சுட்டப்படுவது இல்லை. தொல்காப்பியமும் அகப்பொருள் மரபினைக் கூறும்போது.

"சுட்டி யொருவர் பெயர் கொளப் பெறார்"

ஒருவரின் இயற்பெயர் சுட்டப்பெறுவது மரபில்லை என்று கூறுவார் (Ellampuranar, 2005). சங்க அக இலக்கியமான ஐங்குறுநூற்றிலும் மாந்தர்களின் பெயர்சூட்டப்படாத மரபு கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பொதுவான பெயர்களை இட்டு வழங்குவதற்குச் இயற்கை சார்ந்த பெயர்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

"நெடுமலைநாடன்"

"நல்மலைநாடன்"

"ஓங்குமலைநாடன்"

"கானகநாடன்"

"குன்றநாடன்"

"மாமலைநாடன்" (Thatchinamoorthy, 2004)

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலடி தலைவனின் பெயரானது மலையின் சிறப்புக் காரணமாக நெடுமலைநாடன், நல்மலைநாடன், குன்றநாடன், ஓங்கு மலைநாடன் என்றும் நீர் செழிப்பின் காரணமாக தண்துறை ஊரன், பூக்கஞல் ஊரன், அணித்துறை ஊரன், புனல் அணி ஊரன், பொய்கை ஊரன், பெரும்புனல் ஊரன் எனக் குறிப்பிட்டத்தை

'அணித்துறை ஊரன்" (Thatchinamoorthy, 2004)

'உளைப்பூ மருதத்துக் கிளைக்குருகு இருக்கும்

தண்துறை ஊரன்" (Thatchinamoorthy, 2004)

'அணங்கு சினை மா; அத்து அணிமயில் இருக்கும்

பூக்கஞல் ஊரன்”

'பூக்குற்று எய்திய புனல் அணி ஊரன்”

'பொய்கை ஊரன்” (Thatchinamoorthy, 2004)

மேற்கூறிய ஐங்குறுநூற்றுப் பாடலடிகள் மூலம் தலைவனின் பெயரானது இயற்கையைச் சார்ந்து அமைந்துள்ளதைப் பதிவு செய்கிறது.

'அணங்கு சினை மா அத்து அணிமயில் இருக்கும்

பூக்கஞல் ஊரன்”

'பூக்குற்று எய்திய புனல் அணி ஊரன்”

'பொய்கை ஊரன்” (Thatchinamoorthy, 2004)

மேற்கூறிய ஐங்குறுநூற்றுப் பாடலடிகள் மூலம் தலைவனின் பெயரானது இயற்கையைச் சார்ந்து அமைந்துள்ளதைப் பதிவு செய்கிறது.

## இயற்கையோடு இணைந்த தெய்வ வழிபாடு

நீர்த்துறையின் கண் தெய்வங்கள் உறைவது உண்டு என்று சங்ககால மக்கள் நம்பினர்.

“நெய்தல் நறுமலர் செருத்தியொடு விரைஇக்

கைபுனை நறுந்தார் கமழும் மார்பன்

அருந் திறற் கடவுள் அல்லன்

பெருந் துறைக் கண்டு இவள் அணங்கியோனே”

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் மூலம் நீர்த்துறைகள் இருக்கும் இடத்தை மக்கள் தெய்வமாக எண்ணினர் என்பதையும் இயற்கைக்கு கடன் கொடுத்தல், பூசைகொடுத்தல் போன்றவை அக்காலத்தில் இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது (Thatchinamoorthy, 2004).

## இயற்கைசார் தெய்வ வழிபாடு

மலை வாழ் குறவர்க்கு அம்மலைக்குத் தெய்வமான முருகன் குலதெய்வம் என்பது எல்லாரும் அறிந்த உண்மையாகும்.

“குன்றக் குறவன் காதல் மடமகள்

மன்ற வேங்கை மலர் சிலகொண்டு

மலை உறைகடவுள் குலமுதல் உழுத்தி

தேம்பலிச்செய்தாஈர்நறுங்கையன்”

என்ற ஐங்குறுநூற்றுப்பாடல் குன்றக் குறவனின் மகள் தன் காதல் நிறைவேற வேண்டும் என்று முருகவேளுக்குச் சில மலர்களைத் தூவி தேனாகிய பலியைக் கொடுத்து வழிபட்டாள் என்பதை எடுத்துரைக்கிறது (Thatchinamoorthy, 2004), இதே போன்று சங்ககாலத்தில் மலர் தூவி இறைவனை வழிபட்டனர் என்பதை

“மலரணி பெருக்கம் ஏறி”

என்று பட்டினப்பாலை பாடலடிகள் பதிவு செய்கின்றது (Subramaniyam, 2006).

## காக்கைக்கு உணவிடல்

காகம் கரைந்தால் விருந்தினர் வருவர் என்பது பண்டைய காலத்தில் இருந்து நிலவி வரும் வழக்கமாகும். காக்கை கரைவது நல்ல நிமித்தமாகும். காக்கைக்கு உணவிடல் பண்டையநாள் தொட்டு இன்று வரையிலும் தமிழரிடையே நிலவும் வழக்கமாகும்.

"மறு இல் தூவிச் சிறு கருங் காக்கை

அன்புடை மரபின் நின் கிளையோடு ஆரப்

பச்சூன் பெய்த பைந் நிண வல்சிப்"

என்ற ஐங்குறுநூற்றுப்பாடல் சங்ககால மக்கள் காக்கைக்கு உணவு இட்டு ஒப்ப மதித்தமை உயிரினப் பாதுகாப்பின் உயர்வை உணர்த்துகிறது (Thatchinamoorthy, 2004).

## இயற்கையும் ஆடையும்

'ஆள்பாதி ஆடைபாதி' 'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்' 'தோற்றம் ஏற்றம் தரும்' என்னும் தொடர்கள் ஆடையின் இன்றியமையாமையை உணர்த்துகின்றன. தழையாடை என்பது இலை தழைகளால் ஆன ஆடையாகும். நூலை நூற்று ஆடையாக நெய்து அணிவதற்கு முன் மனிதன் இலைகளையும், தழைகளையும் ஆடையாக அணிந்து கொண்டான்.

"எக்கர் ஞாழல் மலர்இல் மகளிர்

ஒண்தழை அயரும் துறைவன்

தன் தழை விலை எனநல் கினள்நாடே"

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலடிகள் நெய்தல் நில மகளிர் தழை ஆடையினை அணிந்துள்ளனர் என்பதைப் புலனாக்குகிறது (Thatchinamoorthy, 2004).

'மணல் ஆடு மலிர் நிறை விரும்பிய ஓண்தழை

புனல் ஆடு மகளிர்க்குப் புணர்துணை உதவும்'

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலடி தழையாடையை மகளிர் விரும்பியதால் காதலன் தன் காதலிக்குக் கையுறையாகத் தழையாடையைக் கொடுக்கும் பழக்கம் இருந்ததை அறியமுடிகிறது (Thatchinamoorthy, 2004). நொச்சித்தழையை இளமகளிர் விரும்பித் தழையாடையாக அணிந்ததை

'நீர் அறவு அறியா நிலமுதற்கலந்த

கருங்குரல் நொச்சிக் கண் ஆர்குரூ உத்தழை

மெல் இழை மகளிர் ஐது அகல் அல்குல்

தொடலை ஆகவும் கண்டமை

மேற்கூறிய புறநானூற்றுப் பாடல் அடிகள் பதிவு செய்கிறது (Parimanam, 2004).

## ஊகம்புல் குடில்கள்

குன்றத்தின் கண்வாழும் குறவனின் இல்லம் எளிய ஊகம்புல்லால் வேய்ந்த சிறுகுடில்கள்; என்பதை

"குன்றக் குறவன் புல் வேய் குரம்பை

மன்று ஆடு இளமழை மறைக்கும் நாடன்"

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலடி மூலம் மலைவாழ் மக்கள் தங்கள் உறைவிடமான சிறுகுடில்களை அமைப்பதற்கு இயற்கையாக வளர்ந்த ஊகம்புல்லைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது (Thatchinamoorthy, 2004). தனது உறைவிட அமைப்பிற்கு தன்னைச் சுற்றியுள்ள இயற்கையைப் பயன்படுத்தியுள்ளனர்.

## மலர் திருமணத்தின் குறியீடு

திருமணம் நிச்சயித்த உடன் மணமகளுக்கு மணமகன் வீட்டார் பூவைக்கும் பழக்கம் இன்றும் நடைமுறையிலுள்ளது. மலர் மனத்தின் குறியீடான நிலை சங்ககாலத்திலேயே தோன்றியதாகும் என்பதை

"நல் மனை வதுவை அயர இவள்

பின் இருங் கூந்தல் மலர் அணிந்தோயே"

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் அடி மூலம் அறியலாம் (Thatchinamoorthy, 2004). தனது வாழ்வின் முக்கிய நிகழ்வுகளோடு இயற்கைப் பொருட்களை இணைத்து மகிழ்ந்துள்ளனர்.

## இயற்கை சார் அணிகலன்

கடலில் இருந்து பெறப்பட்ட சங்கினை வாளால் அறுத்துப் பிளந்து அழகிய வளையல்களையும், பிற தொடிகளையும் செய்து அணிந்தனர்.

"கடற் கோடு அறுத்த, அரம் போழ் அவ்வளை

ஒண் தொடி மடவரல் கண்டிகும்"

என்கிறது. ஐங்குறுநூறு தன்னை அழகுபடுத்தும் அணிகலன்களைத் தன்னைச் சார்ந்த இயற்கை பொருளிலிருந்து தேர்வு செய்ததன் மூலம் சங்ககால மக்களின் கலைத்திறன் வியப்பிற்குரியது (Thatchinamoorthy, 2004).

## முடிவுரை

உயிரினங்கள் இந்தப் பூமியில் வளமுடன் வாழ இயற்கை பல வழிகளில்; துணைபுரிந்துள்ளது. சங்ககால மக்கள் பொருளைப் பாதுகாப்பதற்கு இயற்கையைப் பயன்படுத்தியுள்ளனர். ஐங்குறுநூற்றில் மாந்தரின் பொதுவான பெயர்களை இட்டு வழங்குவதற்குச் இயற்கை சார்ந்த பெயர்களை இட்டு வழங்கியுள்ளனர். சங்ககால மக்கள் இலைகளையும், தழைகளையும் ஆடையாக அணிந்தனர். ஊகம்புல்லால் வேய்ந்த சிறு குடில்கள் அமைத்து வாழ்ந்தனர். சங்கினை வாளால் அறுத்து பிளந்து அழகிய வளையல்களையும், பிற தொடிகளையும் செய்து அணிந்தனர். அழகுபடுத்தும் அணிகலன்களைத் தன்னைச் சார்ந்த இயற்கை பொருளிலிருந்து தேர்வு செய்தனர்.

## References

Ellampuranar, (2005) Tholkappiyam Porulathikaram, Saratha pathippakam, Chennai. Tamilnadu, India

Nagarajan, V., (2004) Patthupattu Moolamum uraium, New Century Book house, Chennai, India

Parimanam A.M., Balasubramaniam. K.V., (2004) Purananuru Moolamum uraium, New Century Book house. Chennai, India.

Subramaniyam, S.V., (2006) Sanga ilakkiyam Mullamum Uraium, Manivasagar pathippagam, Chennai, India.

Thatchinamoorthy, (2004) Ingurunuru Moolamum Uraium, New Century Book house, Chennai, Tamilnadu, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License